(ஈ) வால்பாறை பேருந்து நிலையம் அருகில் கூடுதல் கழிப்பிடம் கட்டுதல்

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அடுத்த கவன ஈர்ப்பு. திரு. கோவை தங்கம் அவர்கள், அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை மாண்புமிகு செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வருவார். திரு. கோவை தங்கம்.

திரு. கோவை தங்கம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "வால்பாறை பேருந்து நிலையத்தில் கழிப்பிடம் கட்ட, சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டுத் திட்ட நிதியிலிருந்து நிதி ஒதுக்கீடு செய்தும், கட்டடம் கட்ட நகராட்சி நடவடிக்கை மேற்கொள்ளாதது" குறித்த அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை மாண்புமிகு செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

மாண்புமிகு திரு. கே.பி. அன்பழகன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, விவர அறிக்கை ஒன்று அவைமுன் வைக்கப்பட்டுள்ளது:

அறிக்கை

தற்போது, வால்பாறை நகராட்சியால் 13 பொதுக் கழிப்பிடங்களும், ஒரு மகளிர் சுகாதார வளாகமும் பராமரிக்கப்பட்டு வருகிறது. மேலும், 2004–2005 ஆம் ஆண்டு சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டுத் திட்டத்தின்கீழ் ரூ.3.00 இலட்சம் ஒதுக்கீடு பெறப்பட்டு, காந்தி சிலை அருகில் பொதுக் கழிப்பிடம் கட்ட பணி துவங்கும்போது, சுற்றிலும் உள்ள பொது மக்கள் கடுமையான ஆட்சேபனை தெரிவித்ததன்பேரில், பணி நிறுத்தப்பட்டு, தற்போது ரூ.1.00 இலட்சம் மதிப்பீட்டில் சிறுநீர்க் கழிப்பிடம் ஆடவர் மற்றும் மகளிர்க்கென அமைக்கப்பட, சட்டமன்ற உறுப்பினரின் ஒப்புதலுடன் செயல் அலுவலரால் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது. மீதமுள்ள ரூ.2.00 இலட்சத்திற்குப் பிறிதோர் இடத்தில் கழிப்பிடம் கட்ட சட்டமன்ற உறுப்பினர் இசைவுடன் செயல் அலுவலரால் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. கோவை தங்கம்.

திரு. கோவை தங்கம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, விவர அறிக்கையைப் படித்துப் பார்த்தேன். வால்பாறையில் நாள்தோறும் ஆயிரக்கணக்கான மக்கள் பேருந்து நிற்கும் இடத்திற்கு

2005 ஏப்ரல் 12] [திரு. கோவை தங்கம்]

வந்து செல்கின்ற பேருந்து இடமாகும் அது. வயது வந்த பெரியவர்களும், தாய்மார்களும், குறிப்பாக மகளிரும் கழிப்பிடம் இல்லாமல் பெரிதும் கஷ்டப்பட்டுக் கொண்டிருக்கிறார்கள். ஆகவே மாண்புமிகு அமைச்சர் அவர்கள், வால்பாறை, காந்தி சிலை அருகில், பேருந்து நிற்கும் இடத்தில் கழிப்பிடம் கட்ட நடவடிக்கை எடுப்பாரா என்பதைத் தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கே.பி. அன்பழகன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, காந்தி சிலை பேருந்து நிலையம் அருகில், ரூபாய் ஒரு இலட்சம் மதிப்பீட்டிலே, ஒரு சிறுநீர்க் கழிப்பிடம் பொது நிதியிலிருந்து கட்டப்பட ஆரம்பித்தபோது, பொது மக்களின் புகாரின்பேரில், 4 மாத காலம் பணி நிறுத்தப்பட்டது. காந்தி சிலை பேருந்து நிறுத்தம் அருகிலேயே, வேறொரு இடத்தில் சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டு நிதியிலிருந்து ஒதுக்கீடு செய்யப்பட்ட ரூபாய் 3 இலட்சத்திலிருந்து, 2 இலட்சத்து 20 ஆயிரம் ரூபாய் மதிப்பீட்டிலே, நவீன பொதுக் கழிப்பிடம் ஒன்று, சட்டமன்ற உறுப்பினர் ஒப்புதலுடன் கட்டப்பட்டு, தற்போது முடியும் தருவாயில் உள்ளது.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *திரு. கோவை தங்கம்.*

முற்பகல் 10–20

திரு. கோவை தங்கம்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வால்பாறை, காந்தி சிலை அருகில் நாள்தோறும் சுமார் 5 ஆயிரம் பேர் வந்து செல்கின்றனர். அங்கு பொது மக்களுடைய நன்மைக்காகத்தான் கழிப்பிடம் கட்ட வேண்டுமென்ற கோரிக்கையை நான் வைத்திருக்கிறேன். அங்கே பொது மக்கள் இடையூறு செய்கிறார்கள் என்பதில் உண்மை இருப்பதாகத் தெரியவில்லை. ஆனால் உண்மை என்னவென்று சொன்னால், வால்பாறையில் இப்பொழுது மருத்துவமனை, கழிப்பிடங்கள், வகுப்பறைகள் கட்டுவதற்கெல்லாம் கல் கிடைப்பதில்லை. அங்கே ரொட்டிக் கடையிலே ஒரு கல் குவாரி இருக்கிறது. அங்கே கல் எடுக்க அனுமதி இல்லை. ஆகவே வால்பாறை கீழ்ப் பகுதியிலிருந்து கல் எடுத்து வந்துதான் வேலை செய்ய வேண்டிய நிலைமை ஏற்பட்டு இருக்கிறது. இதற்கு ஒப்பந்ததாரர்களுக்கு ஒரு லோடுக்கு 2,500 ரூபாய் வரை அதிகமாகச் செலவாகிறபடியால் வால்பாறையிலே கழிப்பிடம் கட்டுவதற்குக் காலதாமதம் செய்து கொண்டிருக்கிறார்கள். ஏற்கெனவே வால்பாறை நகராட்சியின் சார்பாக, சிறுவர் பூங்கா, ரொட்டிக் கடை, முருகாளி, சோலையார் Dam, முடீஸ் போன்ற பகுதிகளில் (மணியடிக்கப்பெற்றது) ஒரே ஒரு நிமிடம். பகுதிகளில்...*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: எங்கே கட்ட வேண்டும் என்று சொல்லுங்கள்.

திரு. கோவை தங்கம்: பகுதிகளில் கழிப்பிடம் கட்டுவதற்கு நான் நிதி ஒதுக்குவதாக வாக்குறுதி கொடுத்து, அதுவும் அப்படியே நிறுத்தி வைக்கப்பட்டிருக்கிறது. அங்கே கல் இல்லாததுதான் அதற்குக் காரணம். ஆகவே வால்பாறையில் அரசுக் கட்டடங்கள் கட்டுவதற்கு, மருத்துவமனை, வகுப்பறைகள், கழிப்பிடங்கள் போன்ற கட்டடங்களைக் கட்டுவதற்கு மாண்புமிகு அமைச்சர் அவர்கள், கோவை மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்களோடு தொடர்பு கொண்டு, அரசுப் பணிகளுக்கு மட்டும் கல் எடுப்பதற்கு அனுமதி வழங்குவாரா என்பதைத் தங்கள்மூலமாக அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கே.பி. அன்பழகன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, காந்தி சிலை பேருந்து நிலையம் அருகிலே சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டு நிதியிலிருந்து 2.20 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் நவீன பொதுக் கழிப்பிடம் ஒன்று சட்டமன்ற உறுப்பினர் ஒப்புதலுடன் கட்டி முடிக்கப்பட்டிருக்கிறது. மேலும் மீதமிருக்கின்ற ரூபாய் 80 ஆயிரத்தோடு நகராட்சி பொது நிதியிலிருந்து ரூபாய் 1 இலட்சத்து 20 ஆயிரத்தையும் சேர்த்து, 2 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டிலே ரொட்டிக் கடை பகுதியிலே மேலும் இன்னொரு கழிப்பிடம் கட்ட இடம் தேர்வு செய்யப்பட்டு, அந்தப் பணி மேற்கொள்ளப்பட இருக்கிறது. மேலும் மாண்புமிகு உறுப்பினர் சொல்லிய ஆலோசனையை—அரசுக் கட்டடங்கள் கட்டுவதற்குத் தேவைப்படுகின்ற கற்களை அந்தப் பகுதியிலே கொண்டு வருவதற்கு மாவட்ட ஆட்சித் தலைவரோடு கலந்து, பரிசீலிக்கப்படும் என்பதைத் தெரிவித்து, அமர்கின்றேன்.

(உ) மனைப் பிரிவு அங்கீகார விதிமுறைகளை எளிமைப்படுத்துதல் மற்றும் அனுமதியில்லாக் கட்டடங்களை வரன்முறைப்படுத்துதல்

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அடுத்த கவன ஈர்ப்பு. திரு. சி. ஞானசேகரன் அவர்கள் அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை மாண்புமிகு செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வருவார். திரு. சி. ஞானசேகரன்.